***

JUDICIAL FORM NO.53
{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | } | |
| Miscellaneous | } | Case No : - CC// 178 /2019 |
| | : | Prosecution P.W - 4 |
| NAME | : | Dr.தங்கசாமி |
| FATHER'S NAME | : | |
| VILLAGE | : | |
| TALUK | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Tuesday 25.11.2025.

**முதல் விசாரணை**

நான் தற்போது சொக்கம்பட்டி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் முதுநிலை மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 21.03.2016 ம் தேதி கடையநல்லூர் அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக நான் முழு நேர பணியில் இருந்த போது மதியம் 03.15 மணியளவில் அப்துல் மன்னார், த/பெ. அப்துல் மஜித் என்பவர் சிகிச்சைக்காக என்னிடம் வந்தார். அவரை நான் விசாரித்த போது அடையாளம் தெரிந்த நபர் ரகுமானியபுரம் 7 வது தெருவில் வைத்து மதியம் 2 மணியளவில் தன்னை தாக்கியதாக கூறினார். அவரை நான் பரிசோதனை செய்தேன். அவருக்கு ஏற்பட்ட காயம் நெற்றியில் ஒரு வெட்டு காயம் இருந்தது. தலையின் இடது பக்கம் ஒரு வெட்டு காயம் காணப்பட்டது. அவருக்கு நான் முதலுதவி சிகிச்சை செய்து மேல் சிகிச்சைக்காக தென்காசி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன். தென்காசி அரசு மருத்துவமனையிலிருந்து கிடைக்கப்பெற்ற விவரங்களின் படி அவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என சான்று வழங்கினேன். மேற்படி காயச்சான்று அசாஆ.2 ஆக குறியீடு

செய்யப்படுகிறது. போலிஸார் என்னை விசாரித்தனார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

புகார்தாரருக்கு ஏற்பட்ட காயம் கடப்பா கல்லால் தன்னை தாக்கியதாக விபத்து பதிவேட்டில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். மரத்தை வெட்டும் போது அந்த கொப்பு தலையில் விழுந்தால் மேற்படி காயம் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் அவ்வாறு நடந்தால் ஒரு காயம் ஏற்படலாம். ஆனால் புகார்தாரருக்கு இரண்டு காயங்கள் இருந்தது. முதல் காயம் அவ்வாறு ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் வாய்ப்புள்ளது. இரண்டாவது காயம் ஒரு தாழ்வான வீட்டில் உள்ளே நுழையும் போது நிலை தட்டியோ அல்லது கவனக்குறைவாக கீழே விழுந்தாலோ ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் வாய்ப்புள்ளது. மேற்படி காயங்களின் நீளம் அகலம், வடிவம் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். நான் சொல்வது போன்று சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும் போலிஸார் கேட்டு கொண்டதற்கு இணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//– Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi